RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-93 | 10 ஏப்ரல் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ரெப்போ வட்டி விகிதம் 6% ஆக குறைப்பு: வீடு, வாகன கடன்களுக்கான வட்டி விகிதம் குறைய வாய்ப்பு

மும்பை, ஏப்.10

வங்கிகளின் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வீடு, வாகனக் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். ரெப்போ விகிதம் கடந்த 5 ஆண்டுகளாக 6.50% ஆக இருந்த நிலையில், கடந்த பிப்ரவரி 7ம் தேதி 0.25% குறைக்கப்பட்டு, 6.25% ஆக இருந்தது.

இந்நிலையில், இரண்டு மாதங்களில் அது மேலும் 25 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்டு 6% ஆக மாற்றப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இதன்மூலம் ரிசர்வ் வங்கி தனது நிலைப்பாட்டை 'நடுநிலை' என்பதிலிருந்து 'இணக்கம்' என்ற நிலைக்கு மாற்றியுள்ளது.

202526 ஆம் நிதியாண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.5% ஆக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் அதே நிதியாண்டுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டு (சிறிமி) பணவீக்கம் 4% ஆகக் கணிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ் சய் மல்ஹோத்ரா நடப்பு நிதியாண்டின் முதல் இருமாத பணவியல் கொள்கையில் இந்த அறிவிப்புகளை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து மதியம் 12:00 மணிக்கு செய்தியாளர் சந்திப்பு நடைபெறும். அதில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு ரிசர்வ் வங்கி ஆளுநர் பதிலளிக்க உள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் பரஸ்பர கட்டணங்கள் அமலுக்கு வரும் நாளில், ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 5 நாட்களுக்குப் பிறகு மீண்டும் உயர்ந்த தங்கம் விலை

சென்னை, ஏப்.10

தொடர்ந்து குறைந்து நகை வாங்குவோர் மத்தியில் மகிழ்ச்சியையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்திவந்த தங்கம் விலை 5 நாட்களுக்குப் பின்னர் இன்று (ஏப்.9) மீண்டும் உயர்ந்தது.

அதன்படி சென்னையில் இன்று (புதன் கிழமை) 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.65 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8290க்கும், பவுனுக்கு ரூ.520 உயர்ந்து ஒரு பவுன் ரூ.66,320 க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.102க்கும் கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.1,02,000 க்கும் விற்கப்படுகிறது.

பவுனுக்கு ரூ.2,680 வரை குறைவு: தங்கம் விலை கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒரு பவுன் ரூ.68,000+ கடந்து புதிய வரலாற்று உச்சத்தைத்



தொட்டது. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் சற்றே ஆறுதல் தரும் விதமாக கடந்த சில தினங்களாக தங்கம் விலை தொடர்ந்து குறைந்து வந்தது.

ஏப்ரல் 4ம் தேதி பவுனுக்கு ரூ.1,280, ஏப்ரல் 5ம் தேதி பவுனுக்கு ரூ.720, ஏப்ரல் 7ம் தேதி பவுனுக்கு ரூ.200 குறைந்தது. (ஏப்.8) பவுனுக்கு ரூ.480 குறைந்துள்ளது. கடந்த 5 நாட்களில் மட்டும் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,680 வரை சரிந்தது.

இவ்வாறாக, தொடர்ந்து குறைந்து நகை வாங்குவோர் மத்தியில் மகிழ்ச்சியையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்திவந்த தங்கம் விலை 5 நாட்களுக்குப் பின்னர் இன்று மீண்டும் உயர்ந்துள்ளது.

## தமிழகத்தில் இன்றும் நாளையும் மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப்.10

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வளிமண்டல சுழற்சி போன்றவை காரணமாக தமிழகத்தில் இன்றும், நாளையும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு வங்கக் கடலின் மத்தியப் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று காலை தென்மேற்கு மற்றும் அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக நிலவியது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக தொடர்ந்து, வடக்குவடமேற்கு திசையில் மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நகர்ந்து நாளை வடக்குவடகிழக்கு திசையில் திரும்பி, மத்திய வங்கக்கடல் பகுதிகளில் படிப்படியாக



வலுவிலக்கக் கூடும்.

தென்மேற்கு மற்றும் அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் இருந்து தென் தமிழகம் வரை வளி மண்டல சுழற்சி நிலவுகிறது. இவற்றின் தாக்கத்தால் தமிழகத்தில் இன்றும், நாளையும் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகப் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப் புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 96.8 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82.4 டிகிரி பாரன்ஹீட் அளவில் இருக்கும்.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரிக் கடல் பகுதிகளில் இன்று முதல் 12ம் தேதி வரையும், தென்மேற்கு, மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் 11ம் தேதி வரையும் மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும். இந்த நாட்களில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல்வர் தலைமையில் 'நீட்' ஆலோசனை கூட்டம்

சென்னை, ஏப்.10

நீட் தேர்வு தொடர்பாக அனைத்து சட்டப்பேரவை கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று மாலை தலைமை செயலகத்தில் நடைபெறவுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு கோரும் சட்ட மசோதாவுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்க மறுத்துள்ளதாக சட்டப்பேரவையில் கடந்த 4ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய முதல்வர், "தமிழக மக்களின் எண்ணங்களையும் பேரவையின் தீர்மானங்களையும் மத்திய அரசு கவனத்தில் கொள்ளவே இல்லை. மத்திய அரசு நமது கோரிக்கையை நிராகரித்து இருக்கலாம். ஆனால் நீட் தேர்வை ரத்து செய்வதற்கான நமது போராட்டம் எந்த வகையிலும் முடிந்து விடவில்லை. போராட்டத்தின் அடுத்தக்கட்டத்தில் நாம் எடுக்கவேண்டிய சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் குறித்து சட்டவல்லுநர்களுடன் கலந்து ஆலோசிக்கப்படும். இது தொடர்பாக அனைத்து சட்டப் பேரவை கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசனை கூட்டம் வரும் 9ம் தேதி மாலை நடைபெறும். அந்த கூட்டத்தில் சட்டப்பேரவை கட்சி தலைவர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

## குமரி அனந்தனுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்.10

மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனின் தந்தையுமான குமரி அனந்தன் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 93. அவரது மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்திருந்தார்.

கருணாநிதியை மேற்கோள் காட்டி.. முதல்வர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், "காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவரும் தமிழின்பால் பெரும்பற்று கொண்டவருமான இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

குமரி மாவட்டத்தில் பிறந்து, பெருந்தலைவர் காமராசரின் அடியொற்றி, காங்கிரஸ் பேரியக்கத்துக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட அவரது மறைவு தமிழ்ச்சமூகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய பெருமை இவரையே சாரும். அதனால்தான் கலைஞர் இதுகுறித்து குறிப்பிடும்போது, "தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி அமைத்துவிட்டார்" எனப் புகழாரம் சூட்டினார்.

தமிழே தன் மூச்செனத் தமிழ்த் திருப்பணிக்கு வாழ்ந்திட்ட அவரது பெருவாழ்வைப்



போற்றி, அவருக்கு நமது அரசின் சார்பில் கடந்த ஆண்டு 'தகைசால் தமிழர்' விருது வழங்கி பெருமை கொண்டோம். விடுதலை நாள் விழாவில் அந்த விருதினை நான் வழங்கியபோது, என் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு வாஞ்சையோடு உறவாடிய அவரது நினைவு என் கண்களில் கண்ணீரைப் பெருக்குகிறது.

ஏராளமான நூல்களையும் எண்ணற்ற மேடைகளையும் கண்ட அவரது தமிழால் நம் நெஞ்சங்களில் அவர் என்றும் நிறைந்திருப்பார் என ஆறுதல் கொள்கிறேன்.

'தகைசால் தமிழர்' குமரி அனந்தன் மறைவால் வாடும் அருமை சகோதரி தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், உறவினர்கள், காங்கிரஸ் பேரியக்கத் தொண்டர்கள், அரசியல் மற்றும் இலக்கிய வட்டங்களைச் சேர்ந்த சொந்தங்கள் என அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டிருந்தார்.

சட்டப்பேரவையில் மவுன அஞ்சலி: இதனைத் தொடர்ந்து தமிழக சட்டப்பேரவையில் குமரி அனந்தன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது. சபாநாயகர் அப்பாவு இரங்கல் தீர்மானத்தை வாசித்து சட்டப்பேரவை உறுப்பினர்களை மவுன அஞ்சலி செலுத்தக் கோரினார். அதன்படி சட்டப்பேரவையில் மவுன அஞ் சலி செலுத்தப்பட்டது.

முதல்வர் நேரில் அஞ் சலி: தொடர்ந்து சென்னை சாலிகிராமத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட குமரி அனந்தன் உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அவரது மகள் தமிழிசை சவுந்தரராஜனிடம் பேசி ஆறுதல் கூறினார்.

பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவராகவும், ஆளுநராகவும் பதவி வகித்த தமிழிசை சவுந்தரராஜனின் தந்தை மறைவு செய்தியை பாஜக பெரிதாக கண்டுகொள்ளவே இல்லை. அவர்களுக்கு இருக்கும் பல ஆயிரம் பிரசச்னைகளில் இது ஒரு விஷயமா என்பதுபோல நடந்து கொள்கிறார்கள் என்பதுதான் இதில் வேதனையானது.

### அரசு மரியாதை

"தமிழே தன் மூச்செனத் தமிழ் திருப்பணி செய்த குமரி அனந்தன் திருவுடலுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும்" என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில், காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவர், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் மறைவுற்ற செய்தியை அறிந்து முதல்வர் தனது வேதனையையும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளார். அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் தமிழ்ச் சமுதாயத்துக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிய அவருக்கு கடந்த ஆண்டு தமிழக அரசு 'தகைசால் தமிழர்' விருதை வழங்கி கவுரவித்தது.


தமிழே தன் மூச்செனத் தமிழ்த் திருப்பணிக்காக வாழ்ந்திட்ட குமரி அனந்தன் பெருவாழ்வைப் போற்றிடும் வகையில், அவரது உடலுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகாவீரர் ஜெயந்தி: சமண சமய மக்களுக்கு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

சென்னை, ஏப்.10

நாளை மகாவீரர் ஜெயந்தி கொண்டாடப்படுவதை ஒட்டி, "சமண சமய மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த மகாவீரர் ஜெயந்தி நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்." என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் வாழ்த்து செய்தியில், "பகவான் மகாவீரர் அவதரித்த திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழும் சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த 'மகாவீரர் ஜெயந்தி' நல்வாழ்த்துகளை



மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பகவான் மகாவீரர் அவர்கள் இளமையிலேயே தனது சுக வாழ்க்கையைத் துறந்து, இயற்கைச் சக்திகளோடு தமது வாழ்க்கை நெறிமுறைகளை இணைத்து, அகிம்சையைப் பின்பற்றி, வாய்மையைப் போற்றி, ஆசைகளைக் களைந்து, பற்று அற்ற நிலையைக் கடைபிடித்து வாழ்ந்தவர். அறநெறியையும், ஆன்மிக நெறியையும் தவறாது பின்பற்றியவர்.

பகவான் மகாவீரரின் வாழ்வே, அவரது போதனைகளுக்கு எடுத்துக்காட்டாகும். இந்தியா முழுவதும் சமண சமய மக்கள் அனைவரும், அவரது ஆழ்ந்த போதனைகளை மதிக்கும் நிகழ்வுகளில் பயபக்தியுடன் ஈடுபடுவது வழக்கம்.


மகாவீரரின் பிறந்த நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்த இனிய நாளில், மக்கள் அனைவரும் பகவான் மகாவீரரின் வாழ்க்கையையும், போதனைகளையும் கடைபிடித்து வாழ்ந்திட வேண்டும் என்று மனதார வாழ்த்தி, அனைவருக்கும் இனிய 'மகாவீரர் ஜெயந்தி' வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பொது சார்ஜிங் மையம் அமைக்க தமிழக மின்வாரியம் திட்டம்

சென்னை, ஏப்.10

மின்சார வாகனங்களுக்கு எளிதில் சார்ஜிங் செய்வதற்கான வசதி கிடைக்க, தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பொது சார்ஜிங் மையங்களை அமைக்க மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் விதமாக பெட்ரோல், டீசலுக்குப் பதிலாக பேட்டரியில் ஓடும் வாகனங்கள், சிஎன்ஜி எரிவாயுவில் இயங்கும் வாகனங்களை பயன்படுத்துமாறு அனைத்து மாநில அரசுகளையும், மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. இதற்கு ஏற்ப பலரும் மின்சார வாகனங்களை வாங்கி பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர். மின்சார வாகனங்களுக்கு எளிதில் சார்ஜிங் வசதி கிடைக்க தேசிய நெடுஞ்சாலையில் ஒவ்வொரு 25 கி.மீ. தூரத்துக்கும் ஒரு சார்ஜிங்



மையம், நகரங்களில் ஒவ்வொரு 3 கி.மீ. தூரத்துக்கு ஒரு மையம் அமைக்க பொதுத்துறை நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டது.

அதன்படி, தமிழக மின்வாரியம் முதற்கட்டமாக, 100 துணை மின்நிலையங்களில் காலியாக உள்ள இடங்களில் சார்ஜிங் மையங்களை அமைக்க முடிவு செய்தது. ஆனால், நிதி நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் அதற்கான பணிகளை மேற்கொள்ளவில்லை. தற்போது, பசுமை மின்திட்டங்களை ஊக்குவிக்க மின்வாரியத்தின் துணை நிறுவனமான மின்னுற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இருந்து பசுமை எரிசக்தி கழகம் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பொது சார்ஜிங் மையம் அமைக்க முடிவு செய்துள்ளது.

இதன்படி சென்னை மாவட்டத்தில், மாநகராட்சியுடன் இணைந்து 100 சார்ஜிங் மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதேபோல் மற்ற மாநகராட்சிகள், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தலா 5 முதல் 10 வரை சார்ஜிங் மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறும்போது, "முக்கிய நகரங்களில் பொது சார்ஜிங் மையங்கள் அமைக்க போதிய இடம் கிடைப்பதில் சிரமமாக உள்ளது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடங்களில் சார்ஜிங் மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதனால், தமிழகம் முழுவதும் தடையின்றி சார்ஜிங் வசதி கிடைக்கும்" என்றார்.

## வண்டலூரில் சித்தி விநாயகர் கோவில் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றும் பணியை ஜை போட்டு துவங்கி வைத்த மாவட்ட கவுன்சிலர்






வண்டலூர் ஏப்10

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய வண்டலூர் ஊராட்சியில் சித்தி விநாயகர் கோவில் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றும் பணியை காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய அண்ணா தொழிற்சங்க செயலாளர் எஸ்.செங்குட்டுவன், ஒன்றிய வர்த்தக அணி துணைச் செயலாளரும் வண்டலூர் ஊராட்சி 5வது வார்டு உறுப்பினர் எம்.மாவீரன் ஆகியோர் ஏற்பாட்டில் கோவில் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றும் பணி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கவுன்சிலர் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கஜா என்கின்ற கஜேந்திரன் கலந்துகொண்டு வண்டலூர் ஊராட்சியில் உள்ள கோவில் குளத்தை ஆகாயத்தாமரை அகன்று பணியை பூஜை போட்டு துவங்கி வைத்தனர் இந்த நிகழ்ச்சியில் 4வது வார்டு செயலாளர் செல்வ சேகர், 6வது வார்டு செயலாளர் குளசேகரன், 8வது வார்டு செயலாளர் கார்த்திகேயன், யாமூர்த்தி, முரளி, சதீஷ், ஸ்ரீ சாய் விக்னேஷ், மற்றும் சித்தி விநாயகர் கோவில் நண்பர்கள் குழு பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்..

## வீட்டு சமையலறைக்குள் புகுந்த நல்லபாம்பு பத்திரமாக மீட்ட வனத்துறையினர்



கன்னியாகுமரி ஏப்10

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் தாழக்குடி பேரூராட்சிக்குட்பட்ட வீரநாராயணமங்கலம் கீழத் தெருவை சார்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் வேலாயுதம்பிள்ளை அவர்களின் வீட்டு சமையல் அறையில் நான்கு அடி நீளமுள்ள நல்ல பாம்பு ஒன்று சமையல் எரிவாயு சிலிண்டரில் சுருண்டு பதுங்கி இருந்தது இதனைப் பார்த்த அவருடைய மகன் மங்கபெருமாள் முன்னாள் பேரூராட்சி தலைவரும் கவுன்சிலர் ரோகிணிஅய்யப்பன் மற்றும் முன்னாள் கவுன்சிலர் மணி ஆகியோருக்கு தகவல் கொடுத்தனர் தகவல் அறிந்த தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவரும் கவுன்சிலர் ரோகிணிஅய்யப்பன் மாவட்ட வன அலுவலர் அவர்களுக்கு தகவல் கொடுத்தார் தகவல் கொடுத்ததின் பேரில் ஆரல்வாய்மொழி வன காவலர் தனுஷ் உடனடியாக விரைந்து வந்து சமையல் அறையில் பதுங்கி இருந்த நல்ல பாம்பை பிடித்து ஆரல்வாய்மொழி வனப்பகுதியில் கொண்டு விட்டார் இதனால் வீட்டினுடைய உரிமையாளர் நிம்மதி அடைந்தார்.

## செங்கல்பட்டு மாவட்டம் பொன்மார் ஊராட்சியில் தி.மு.க சார்பில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி திறப்பு



பொன்மார் ஏப்10

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியம், பொன்மார் ஊராட்சி மலைவாழ் மக்கள் கோரிக்கையானது நிறைவேற்றப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர், தா.மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் வழிகாட்டுதலின்படி, பொன்மார் ஊராட்சி மன்ற தலைவர், எஸ். நாராயணன் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஜல் ஜீவன் மிஷன் சேமிப்பு இதிலிருந்து 2023 2024 திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் பொன்மார் குடிநீர் திட்டம் மேல்நிலை 60,000. லிட்டர் கொள்ளளவு, நீர்தேக்கத்தொட்டி ரூ. 27,25 மதிப்பீட்டில் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவருமான எஸ். ஆர். எல். இதயவர்மன் ரிப்பன் வெட்டி மகிழ்ச்சியுடன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தலைமை பொது குழு உறுப்பினர், மா.கு. துணைத் தலைவர், ஜி. சி. அன்புச்செழியன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், பி. டீ. வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர், எல். சுரேஷ்

உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா பள்ளிகல்வித்துறை சார்பில் நாகர்கோவில் புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற உயர்கல்வி வழிகாட்டிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாமில் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் கையேட்டிளை வெளியீட்டு தலைமையாசிரியர்களுக்கு வழங்கினார்கள்.

## தாம்பரம் மாநகரத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கிய திமுக நிர்வாகிகள்



தாம்பரம் ஏப்10

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதியும் மற்றும் தாம்பரம் மேற்கு பகுதிகள் இணைந்து தாம்பரம் சண்முகம் சாலை மார்கெட் பகுதி கிருஷ்கிந்த துணி கடை அருகில் உச்சநீதி மன்ற தீர்ப்பினை வரவேற்று பகுதி கழக செயலாளர்கள் மண்டல தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஆகியோரின் தலைமையில் உச்சநீதிமன்ற வழங்கிய தீர்ப்பை வரவேற்று பட்டாசு வெடித்தும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் இரா. செல்வகுமார், கி.வேலுமணி, ஆர். செல்வகுமார், ஆர்.ஜீவன், பி.காளியப்பன், ஸ்ரீதர்பாபு, பி.ஜோதிகுமார், எஸ்.ராஜேஷ் சர்தார், சூரியா, எம்.சீனிவாசகுமார், என்.ஷாஜகான், ஆர்.ஆகஸ் டின், குத்தூஸ்கனி, குருமணி, நவின்குமார், ஹரிஸ், தேவன் ராஜேந்திரன், எம்.ரமேஷ், அ.லோகேஷ்குமார், கே.ரமேஷ் பாபு, கு.பிரபாகரன், எஸ்.சுரேஷ், கே.ஞானவேல் ராஜா, த.பிரவீன், பாலா, யாஷ்வந்து மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

## 80 ஆண்டுகளாக சாலை வசதியின்றி தவிக்கும் மக்கள்! சிபிஎம் ஆர்ப்பாட்டம்







நீலகிரி, ஏப்.10

நீலகிரி மாவட்டம் கூடலூர் உப்பட்டி செட்டிவயல் பகுதியில் மக்களுக்கு சரியான சாலை வசதி மற்றும் தெருவிளக்கு அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைத்து நேற்று காலை 10 மணி அளவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் பந்தலூர் ஏரியா கமிட்டியின் சார்பாக நெல்லியான நகராட்சி வளாகத்தில் நடைபெற்ற. உண்ணா நிலைப்போராட்டம் ஊர்வலத்துடன் தொடங்கி நகராட்சி முன் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நகராட்சி அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டவர் களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களது கோரிக்கையை செய்து தருகின்றோம் என்று ஒப்புக்கொண்டனர்.

## பல்லாவரத்தில் திமுக இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து பொதுக்கூட்டம்



பல்லாவரம் ஏப்10

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, பல்லாவரம் தெற்கு பகுதி திமுக சார்பில் திமுக இளைஞர் அணி நடத்தும் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி சீரமைப்பில் அநீதி செய்யும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொது கூட்டம் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது.

மாவட்ட துணை செயலாளரும், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணா நிதி தலைமையில், பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் வரவேற்பில் நடைபெற்ற இந்த பொது கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

முன்னதாக தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

கூட்டத்தில் தலைமை தீர்மானகுழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் திருநீர்மலை த.ஜெயக்குமார், ஏ.கே. கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு தொ.மு.ச பேரவை செயலாளர் இரா.பொன்ராம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகி ராமன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.இன்ச மாம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் செயலே உதாரணம்

## தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை



தென்காசி ஏப்10

தென்காசி வடக்குமாவட்ட முன்னாள் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான டாக்டர் செல்லத்துரை அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து அந்த வெற்றியை கொண்டாடும் விதமாக தென்காசி மதுரை கொல்லம் தேசிய நெடுஞ் சாலையில்கடையநல்லூர் மணிக்கூண்டு அருகே நகரக் கழக செயலாளர் அப்பாஸ் தலைமையில் நகர்மன்றத் துணைத் தலைவர் ராசையா ஒன்றிய கழகச் செயலாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் வெடி வெடித்தும் இனிப்பு வழங்கியும் பொது மக்களோடு தமிழக முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்களின் வெற்றியைபகிர்ந்து கொண்டார் இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் சிட்டி திவான் மைதீன் ராமகிருஷ்ணன் கடையநல்லூர் நகர மன்ற உறுப்பினரும் மாவட்ட திட்ட குழு உறுப்பினரான விவசாய அணி அமைப்பாளர் முருகன் அச்சன்புதூர் பேரூர் கழகச் செயலாளர் துரை அவைத்தலைவர் பெட்டி முருகன் இடைகால் அறங்காவலர் குமார் ஒன்றிய குழு துணை தலைவர் ஐவேந்திரன் தினேஷ் இளைஞரணி பீரப்பா யாசின்மற்றும் கழக நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள் ஒன்றிய கழக செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது பற்றிய விபரம் ஆவது தமிழக ஆளுநர் ஆர் என் ரவி அவர்கள் சட்டமன்றத்தில் ஏற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து தமிழக அரசு தொடர்ந்து



வழக்கில் சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பு வழங்கியது கவர்னர் என தனிப்பட்ட அதிகாரம் இல்லை ஆளுநருக்கு பதில் முதலமைச்சரை பல்கலைக்கழக வேந்தர் ஆக்குவதற்கான மசோதா கால்நடை பல்கலைக்கழக திருத்த மசோதா மீன்வளப் பல்கலைக்கழக திருத்த மசோதா தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு முதலமைச்சர் வேந்தர் ஆக்குவதற்கான மசோதா தமிழ்நாடு எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு முதலமைச்சர் வேந்தர் ஆக்குவதற்கான மசோதா தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா தமிழ் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் இரண்டாம் திருத்த மசோதா கால்நடை பல்கலைக்கழகங்கள் இரண்டாம் திருத்த மசோதா மற்றும் மீன்வள பல்கலைக்கழக இரண்டாவது திருத்த மசோதா ஆகிய பத்து மசோதாக்களை தமிழக ஆளுநர் ரவி நிறுத்தி வைத்திருந்தார் இதை உச்ச நீதிமன்றம் மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்து தமிழக அரசு கவர்னர் ரவிக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் அதிரடி கவர்னருக்கு என தனிப்பட்ட அதிகாரம் இல்லை என்பதாக தீர்ப்பளித்தது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை அமைச்சரவையின் ஆலோசனைப்படி ஒப்புதல் அளிக்க ஒரு மாதம் காலக்கெடு. நிறைவேற்றப்பட்ட மசோதா குறித்து ஆளுநருக்கு முரணான பார்வை இருந்தால், அதுகுறித்து கலந்தாலோசித்து முடிவெடுக்க 3 மாதங்கள் கெடு. மசோதா 2வது முறையாக பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்டால் அதற்கு ஒரு மாதத்திற்குள் ஆளுநர் ஒப்புதல் அளித்தே தீர வேண்டும்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர்களுக்கு காலக்கெடு விதித்த உச்சநீதிமன்றம். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் இது பொருந்தும் என்றும் தமிழக முதல்வர் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பளித்தது ஒட்டுமொத்த இந்தியாவையே ஏறெடுத்து பார்க்க வைத்துள்ளது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதல்வர்களும் சுதந்திர தினத்தன்று தலைமைச் செயலங்களில் கொடியேற்றும் உரிமையை பெற்றுக் கொடுத்தாரோ அதேபோன்று அவரது வழியில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதழளிக்கும் விவகாரத்தில் தீர்ப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது என கூறினார்



தேனி மாவட்டம் போடி சேனைத்தலைவர் மகாஜன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் கோவில் பங்குனி உற்சவ திருவிழா தலைவர் முருகன் அவர்கள் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.முதல் நாளான நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான பெண்கள் கொட்டகுடி ஆற்றில் இருந்து நகரின் முக்கிய வீதிகளின் வழியாக மங்கள வாத்தியங்களுடன் பால்குடம் எடுத்து வந்து ஆலயத்தை வந்தடைந்தனர்.பால்குடத்தில் எடுத்துவரப்பட்ட புனித நீரை கொண்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் செயலாளர் முருகேசன், பொருளாளர் ரவிச்சந்திரன், துணைத் தலைவர் ஹரிகரன், துணைச் செயலாளர் பாஸ்கரன், உள்ளிட்ட சேனைத்தலைவர் மகாஜன சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.பால்குடம் எடுத்து வந்த பெண் பக்தர்களுக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டது.

# கடையநல்லூர் நகராட்சி முன்பு நீர் மோர் பந்தல் திறப்பு நகரமன்ற தலைவர் ஹபீபுர் ரஹ்மான் சிறப்பு ஏற்பாடு

தென்காசி ஏப்10

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி அலுவலகம் முன்பு தமிழக முதல்வர் மற்றும் திமுக தலைவர் தளபதி ஸ்டாலின் வேண்டுகோளை ஏற்று நகர் மன்ற தலைவரின் சிறப்பான ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது கோடை காலம் முடியும் வரை கழகத்தின் தொண்டர் . சமூக ஆர்வலர் மூலம் தினசரி நீர்மோர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என நகர்மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் தெரிவித்தார் இது பற்றிய விபரம் ஆவது தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கழகத் தலைவர் ஆணைக்கிணங்க ஆற்றல்மிகுதென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அண்ணாச்சி வே. ஜெயபாலன் ஆலோசனையின் படி கடையநல்லூர் நகர மன்ற தலைவர் ' ஹபீபுர்ரஹ்மான் ஏற்பாட்டில் வெயிலின் தாக்கத்தை கருத்தில் கொண்டு பொது மக்களுக்காக நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது இதில் குளிர்பானங்கள் மோர் மற்றும் தர்பூசணிபழம் கிர்ணி பழம் அண்ணாச்சி பழம் இளநீர் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.



இந்நிகழ்வில் முன்னாள் நகர் மன்ற தலைவர்மக்கள் மருத்துவர் சஞ்சீவி கூட்டணி கட்சியான காங்கிரஸ் சார்பாக பி எஸ் சமுத்திரம் மாவட்ட துணை தலைவர் மற்றும் மாடசாமி மிழிஜிஹிசி நகரத் தலைவர் மற்றும் ரவி மாவட்ட பொருளாளர் சர்புதீன் மாவட்ட காங்கிரஸ் துணை தலைவர் மற்றும் மஸ்தான் மாவட்ட துணைச் செயலாளர் மற்றும் குமந்தாபுரம்ராஜேந்திரன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதொழிற்சங்கம் மற்றும் மதிமுக சார்பாக கே எஸ் முருகன் நகரக் கழகச் செயலாளர் எம் சேகனர் மற்றும் பி பி சுப்பிரமணியன் மற்றும் அவல் வேலு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக சையது மசூது நகர தலைவர் மற்றும் முஸ்தபா நகர செயலாளர் மற்றும் ஜபருல்லா நகர பொருளாளர் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் நிர்வாகிகள் அப்பாஸ் அபிபுல்லா மற்றும் அப்துல் சமது மற்றும் கூஷிமஜீத் மற்றும் புலவர் சே குதுமான் மற்றும் ஐயப்பன் அண்ணாவி அப்துல் மஜீத் சையது இமாம். மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் தனலட்சுமி மாலதி நிலோபர். மற்றும் பாத்திமா மற்றும் செய்யது அலி பாத்திமா மற்றும் மீராள் 'ஹைதர்மற்றும் ராமகிருஷ்ணன் மற்றும் நகரக் கழகத் துணைச் செயலாளர் காசி மற்றும் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வார்டு செயலாளர் காளிமுத்து சுப்புராம் மற்றும் சக்திவேல் மீராசா செய்யது மசூது மற்றும் அமானுல்லா மற்றும் தம்புராஜ் அப்துல் ரசாக் அப்துல் அஜீஸ் மற்றும் ஹாஜா மொஹதீன் மற்றும் சுகுமார் மணிகண்டன் .மற்றும் பாலகிருஷ்ணன் வினோத் மற்றும் முத்துக்குமார் தகவல் தொழில் நுட்ப அணி பூபதி குமார் அபிபுல்லா சித்திக் பட்டாணி வர்ணமல்லி கபூர் மற்றும் ஜபருல்லா அப்சரா பாதுஷா மற்றும் முருகானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் செய்தியாளர்களிடம் கூறியதாவது கடந்த காலங்களில் கோடை காலமான மார்ச் ஏப்ரல் மே ஆகிய மூன்று மாதங்கள் பொதுமக்கள் மிகவும் குடிநீருக்கே கஷ்டமான சூழ்நிலை இருந்து வந்தது நிலையில் முத்தமிழ் அறிஞர் மூதறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் கடையநல்லூர் நகராட்சியில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து கோடை காலங்களிலும் நகர்மன்றத்தில் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை இல்லாமல் இருந்து வருகிறது இதனை மேலும் விரிவுபடுத்தும் விதமாக நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் ரூபாய் 864 கோடி கடையநல்லூர் தொகுதி மக்கள் மட்டும் பயன்பெறும் வகையில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தை தி.மு.க அரசு செய்துள்ளது இதே போன்று கடையநல்லூரில் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் பணியாளர்கள் பள்ளி மாணவ மாணவிகள் குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் இந்த கோடை காலத்தில் குடிநீருக்கு அலையும் அவல நிலை ஏற்படக்கூடாது இது இங்கு மட்டுமல்ல தமிழகம் முழுக்க இந்த நிலை உருவாகக் கூடாது என்று எண்ணி தமிழக முதல்வர் அவர்கள் எங்களைப் போன்ற அடிமட்ட தொண்டர்களுக்கு உத்தரவிட்டு உள்ளார் அதனை செயல்படுத்தும் விதமாக கடையநல்லூர் நகர்மன்றத்தின் சார்பில் நகர மன்ற தலைவர் என்ற முறையில் நம் அலுவலகத்திற்கு முன்பே அருமையான இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பொதுமக்களும் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் பள்ளி மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் இந்த நீர் மோர் பண்டல் துவக்கி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்தியா கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர்களுக்கு அழைப்பு கொடுத்து இந்த விழாவை இன்று நடத்துகிறோம் இதனால் பொதுமக்கள் குடிநீருக்கு அலையும் அவல நிலை மாறும் மேலும் சிலரின் வேண்டுகோள் மற்றும் ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு தினசரி இங்கு பணியில் ஒருவர் இருப்பார் அவரிடம் சொல்லியபடி தினசரி காலை 8 மணிக்கு மேல் அவர் பொதுமக்களுக்கு நீர் மோரை வழங்குவார் என தெரிவித்துக் கொள்கிறேன்..

# போடி பேருந்து நிலையம் அருகே திமுக சார்பில் மாணவரணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி



தேனி, ஏப்.10

தேனி மாவட்டம் போடி பேருந்து நிலையம் அருகே திமுக தலைமை கழகத்தின் அறிவுறுத்தலின்படி போடி திமுக நகர செயலாளர் புருசோத்தமன் மாணவர் அணி அமைப்பாளர் முத்துப்பாண்டி தலைமையில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தேனி திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வன் அவர்கள் தேனி திமுக வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஸ்டீபன் ஆகியோர் முன்னிலையில் மாணவரணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி நடைபெற்றது.இந்நிகழ்ச்சியை தேனி பாராளுமன்ற உறுப்பினர் தேனி திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் படிவங்களை பூர்த்தி செய்து மாணவர் உறுப்பினர்களை சேர்த்தார். இந்நிகழ்வில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் சங்கர்,நகர் மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர்,தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான்,மாவட்ட பிரதி நிதிகள் முருகேசன், பஷீர் ,பரணி,தேனி வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் மகேஸ்வரன், தேனி வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் செல்வகுமார்,நகரத் துணைச் செயலாளர் காளிதாஸ்,மதுரை இளைஞர் அணி அமைப்பாளர் சேக் அப்துல்லா சாகுல்,விவசாய தொழிலாளர்களின் மாவட்ட துணை அமைப்பாளர் ராமசாமி மற்றும் நகர கழக நிர்வாகிகள் முக்கிய பிரமுகர்கள் கிளைக் கழக செயலாளர்கள்,நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தினர் கருப்பு சட்டை அணிந்து வேலை நிறுத்த போராட்டம்

மதுரை: ஏப் 10

மதுரை பழங்காநத்தம் பகுதியில் தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பாக பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய வேலை நிறுத்தமும் கருப்பு சட்டை அணிந்து கண்டன போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக, விரல் ரேகை பதிவு, ஆதார் சமர்ப்பிப்பு, 40 சதவீதம் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும், டி என் சி எஸ் சி எடை தராசும், அலுவலக கணினியோடு இணைத்து ரசீது வழங்கிய பின்பு தான் நியாய விலை எடை தராசும் பி ஓ எஸ் விற்பனை முனையத்துடன் இணைக்கப்பட வேண்டும் எனவும், பொது விநியோக திட்டத்திற்கு தனித்துறை வழங்க வேண்டும், அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும்




சரியான எடையில் தரமான பொருட்களை பொட்டலமாக வழங்கப்பட வேண்டும், கல்வி தகுதிக்கு ஏற்ப ஊதியம் வழங்க வேண்டும், ஐஏஎஸ் தலைமையில் ஊதிய குழு அமைத்து 9வது மாநில ஊதிய மாற்ற குழுவுடன் சேர்க்கப்பட வேண்டும் உள்ளிட்ட 30 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கருப்பு சட்டை அணிந்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு நியாயவிலைக் கடை பணியாளர் சங்க மாநிலத் துணைத் தலைவர் செல்லத் துரை பாலமுருகன் அருணாச் சலம் தங்கவேலு பாக்கியம் காளியப்பன் சிவபாண்டியன் பாண்டியன் மாயாண்டி செந்தில்குமார் உட்பட நியாய விலைக் கடை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண்.சே.ச தலைமையில் சிறுபான்மையினர் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், மாநில சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவர் எம்.எம்.அப்துல் குத்தூஸ், மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் ஹேமில்டன் வில்சன், நாகூர்.ஏ.எச்.நஜ்முதீன் அவர்கள்,எஸ்.வசந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், கூடுதல் ஆட்சியர் முகம்மது ஷபீர் ஆலம், சிறுபான்மையினர் நல இயக்ககம் துணை இயக்குநர் ஷர்மிலி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.உமாமகேஷ்வரி உள்ளனர்.

## வத்தலக்குண்டுவில் ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு நிதி பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறு சீரமைப்பில் அநீதியை கண்டித்து திமுக இளைஞர் அணி பொதுக்கூட்டம்

வத்தலகுண்டு ஏப்





திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு வில் ஒன்றிய அரசை கண்டித்து திமுக இளைஞர் அணி சார்பாக பொதுக்கூட்டம் காளியம்மன் கோவில் அருகே ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு,. நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி ஆகியவற்றை கண்டித்து திமுக கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக நிலக் கோட்டை தொகுதி அளவில் பொதுக்கூட்டம் நடைபெற்று நடந்த கூட்டத் திற்கு திமுக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐபி செந்தில்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். அப்போது மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் நீட் தேர்வு ஒழிந்துவிடும். விரைவில் மத்தியில் ஆட்சிமாற்றம் ஏற்படும்.என்றும் தமிழகத்தில்திமுக ஆட்சி 'தொடர்வது தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது மகளிர் உரிமைத் தொகை விடுபட்ட அனைவருக்கும் வழங்கப்படும் என்றார். இந்நிகழ்ச்சிக்கு வத்தலக்குண்டு திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் கே பி முருகன், தெற்கு ஒன்றிய செயலாளர் கனி குமார் ஆகியோர் தலைமை வைத்தனர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், வத்தலகுண்டு திமுக நகர செயலாளர் சின்னத்துரை ஆகியோர் வரவேற்றனர். , மாநில செயற்குழு உறுப்பினர் கனகதுரை நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர்கள் மணிகண்டன், சௌந்தர பாண்டியன், கரிகால பாண்டியன் , நகரச் செயலாளர்கள் நிலக்கோட்டை ஜோசப் கோவில் பிள்ளை, சேபுகம்பட்டிதங்கராஜ், பட்டிவீரன் பட்டிஅருண்குமார், அம்மையநாயக்கனூர் ராஜாங்கம்,பேரூராட்சிதலைவர் கள் வத்தலகுண்டு சிதம்பரம், அம்மையநாயக்கனூர் செல்வராஜ், சேபுகம்பட்டி சுபாஷிணி,வனிதா, துணைத் தலைவர் வத்தலக்குண்டு தர்மலிங்கம், ஜெயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், மேற்கு மண்டல தலைவர் பிலால் உசேன் , திமுக நிர்வாகிகள் முருகேசன், சகாப்தின், ராஜ குமார். கார்த்திக், விஜயகர், மாணிக்கம். கனிசத்ரியன், பட்டாசு பாலு ரவிச்சந்திரன். அமுதவேல்.ரவீந்திரன், தனசேகரன் ஜம் ஜம் ஜாகீர் பேரூராட்சி கவுன்சிலர்கள் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கள் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மகாமுனி நன்றி கூறினார்

## 91 பயனாளிகளுக்கு ரூ. 1.44 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை இராமநாதபுரம் ஆட்சியர் வழங்கினார்

முதுகுளத்தூர், ஏப்.10



முதுகுளத்தூர் அருகே உள்ள புல்வாய்குளம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜித் சிங் காலோன் தலைமை தாங்கினார். பரமக்குடி சப் கலெக்டர் அபிலாஷா கௌர் சமூக பாதுகாப்பு திட்ட அலுவலர் கிருஷ்ணகுமாரி, மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் (விவசாயம்) பாஸ்கர மணியன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சந்திரசேகர் சந்திரமோகன் முதுகுளத்தூர் லட்சுமி, வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கேசவராமன், செய்தி மக்கள் தொடர்பு துணை அலுவலர் விஜயகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாசில்தார் கோகுலநாத் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜித் சிங் காலோன் பேசுகையில் தற்போது மக்களுடன் முதல்வர் திட்டம் சிறப்பு முகாம்கள் ஊராட்சிகள் தோறும் நடைபெறுகிறது. இதில் கிராமங்களில் உள்ள மாணவ மாணவிகள் உயர்கல்வி பெறுகின்ற வகையில் தமிழ் புதல்வன் திட்டம், புதுமை பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது இது மட்டுமின்றி அரசின் ஒவ்வொரு துறையிலும் மக்கள் தேவைக்கேற்ப நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது என தெரி வித்தார்.

இதைத்தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிட மேலாண்மை துறையின் மூலம் 6 பயனாளிகளுக்கு இலவச பட்டா 02 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் 06 பயனாளிகளுக்கு மின்னனும் குடும்ப அட்டை என மொத்தம் 14 16 களுக்கு ரூ. 50,000 மதிப்பீட்டிலும் சமூக நலத்துறை மூலம் 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ரூ.55,384 மதிப்பீட்டிலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 3 பயனாளிகளுக்கு இனிப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் வாகனம் ரூ.30,5400 மதிப்பீட்டிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் 24 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவி குழு கடன் ரூ.20,4000 மதிப்பீட்டிலும் வேளாண்மை துறையின் மூலம் 01 பயனாளிக்கு மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டம் 01 பயனாளிக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டமா 01 பயனாளிக்கு முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் என மொத்தம் 03 பயனாளிகளுக்கு ரூ.7,402 மதிப்பீட்டிலும் தோட்டக்கலை துறையின் மூலம் 02 பயனாளிகளுக்கு agri forestry 2024 2025 ரூ.4800 மதிப்பீட்டிலும் ஊரக வளர்ச்சித்துறை மூலம் 34 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் 2024/2025 ரூ.1,1900000 மதிப்பீட்டிலும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 01 பயனாளிக்கு தையல் இயந்திரம்ரூ.6,690 மதிப்பீட்டிலும் என 91 பயனாளிகளுக்கு ரை.1,43,79,676 மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் நலத்திட்ட அலுவலர் ஜானகி உட்பட அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகலாந்து ஆளுநர் லா. கணேசன் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்ததை முன்னிட்டு காரைக்குடி மாநகராட்சி அழகப்பா பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் மலர் கொத்து வழங்கி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா வரவேற்பு அளித்தார்.உடன் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் கூடுதல் கண்காணிப்பாளர் பிரான்சிஸ் உடனிருந்தார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட 1முதல் 27 வார்டுகளில் உள்ள பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் குழாய்களில் தண்ணீர் சீராக வருகிறதா என்பதை மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி ஆய்வு மேற்கொண்டார் உடன் பிட்டர்,மேனேஜர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் மகிபாலன் பட்டியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் ராஷ்டிரிய AKS விகாஷ் யோஜனா வேளாண் காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகளை பயனாளிகளுக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் நேற்று வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர், ஆட்சியர் நேர்முக உதவியாளர் உட்பட்ட பலர் உடனிருந்தனர்..

## திருவாடானை அருகே காசோலை மோசடி வழக்கில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கைது

திருவாடானை. ஏப்.10



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே உள்ள கட்டிவயல் ஊராட்சி தலைவராக ஆக்களூர் சுப்பிரமணி மகன் முத்துராமலிங்கம் (45) என்பவர் கடந்த 5 வருடமாக ஊராட்சித் தலைவராக இருந்துள்ளார்.

இவர் கடந்த 2021 ஆம் ஆண்டில் எட்டுகுடி கிராமத்தைச் சேர்ந்த ஞானமுத்து மகன் துரைமாணிக்கம் (42) என்பவரிடம் தனது தேவைக்காக 3 லட்சத்து 50 ஆயிரம் கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக ஒரு காசோலை ஒன்றை கொடுத்து அந்த காசோலையை மூலம் இரண்டு மாத காலத்திற்குள் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்துள்ளார்.

அதை நம்பி துரைமாணிக்கம் காசோலையை வங்கியில் செலுத்திய போது முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கத்தின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என திரும்பி உள்ளது. இதனால் அதிர்ச்சிற்ற துரைமாணிக்கம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று இதை பற்றி முத்துராமலிங்கத்திடம் விசாரித்த போது அவர் உரிய பதிலளிக்காமல் இருந்த நம்பிக்கை மோசடி செய்த விவரம் தெரிய வந்தது. பின் துரைமாணிக்கம் திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு செக் மோசடி வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு விசாரனை செய்யப்பட்டு சமரச நீதிமன்றமான லோக் அதாலத்து நீதிமன்றத்திற்கு கடந்த 13.08.2022 ம் தேதி மாற்றப்பட்டு சமரசம் செய்யப்பட்டு அதில் 3லட்சத்து 35 ஆயிரம் ரூபாயை என குறைக்கப்பட்டு சமரசம் செய்து வைத்து அன்றைய தினமே 40 ஆயிரம் ரூபாய் செலுத்தியுள்ளார். மீதி தொகை 2 லட்சத்து 90 ஆயிரத்தில் 07.09.2022ம் தேதி ரூ ஒரு லட்சத்து 50 ஆயிரமும், 27.09. 2022ம் தேதி 1 லட்சத்து 45 ஆயிரத்தை துரை மாணிக்கத்திடம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கம் கொடுத்து விட வேண்டும் என நீதிமன்ற சமரச தீர்வு மையத்தில் முடிக்கப்பட்டது. ஆனால் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கம் பணத்தை செலுத்தாமல் ஏமாற்றி வந்ததால் துரைமாணிக்கம் ராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்றுதல் தாக்கல் செய்தார். அந்த மனுவின் பேரில் முன்னாள் கட்டிவயல் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கம் மீது பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நீதிமன்ற பிடிவாரண்டு உத்தரவுபடி நேற்று ஏப்7ல் தொண்டி சார்பு ஆய்வாளர் ராம்குமார் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கத்தை கைது செய்து திருவாடானை நீதிமன்றத்தில் மூலமாக ராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார். நீதிமன்றத்தில் ஆச்சரியப்படுத்தப்பட்ட முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராமலிங்கம் செலுத்த வேண்டிய மொத்த தொகையில் ஐம்பதாயிரத்துறை செலுத்தி ஒரு மாத காலம் அவகாசம் கேட்டதன் பேரில் அவருக்கு ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்து நீதிபதி உத்தரவிட்டார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட மகிபாலன்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறையின் சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வ சுரபி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்..

## முதுகுளத்தூர் அரசு கலை அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

முதுகுளத்தூர், ஏப்.10



முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் பாண்டிமாதேவி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக ராமநாதபுரம் சேதுபதி கலை கல்லூரி முதல்வர் நாகராஜன் கலந்து கொண்டார். அப்போது கல்லூரி முதல்வர் நாகராஜன் பேசுகையில் கல்வியின் சிறப்பு கடலை விட ஆழமானது வானத்தை விட உயர்ந்தது நாம் அனைவரும் கிராமத்தில் பிறந்தவர்கள் ஜாதி சமயமற்ற கல்வி கிடைக்கவில்லை என்றால் சமுதாயம் முன்னேற்றம் அடைய முடியாது. படிப்பு, தேர்வு, பட்டம் மட்டும் முக்கியமானதல்ல அதற்கு மேல் பாடுபட்டு திறமைகளை வளர்த்துக் கொண்டு வேலைவாய்ப்பை பெற வேண்டும். மேலும் உயர்கல்வி துறையில் இரண்டு மடங்கு முன்னேறி இருக்கிறோம் நூலகத்திற்கு சென்று படிக்கும் காலம் கடந்து தொழில்நுட்ப முறையில் கைபேசியை நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

மேலும் பெற்றோர்களின் அறிவுரை கேட்டு முன்னேறி வளர வேண்டும். இப்பகுதியில் இப்படிப்பட்ட கல்லூரி அமைவது பாராட்டுக்குரியது இந்த வாய்ப்பு நல்ல முறையை பயன்படுத்தி கொள்ள வேண்டும் மேலும் கடின உழைப்பு விடாமுயற்சி இருந்தால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று அறிவுரைகளை வழங்கி மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 20202023, 20212024 ,2 ஆம் கல்வாண்டில் பட்டப்படிப்பு முடித்த 130 மாணவ மாணவிகள் பட்டம் பெற்றனர். இதில் மாணவ மாணவியரின் பெற்றோர்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்டம் பவானி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு சமரச தின விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.இந்த பேரணியை பவானி சார்பு நீதிபதி கே.முனிராஜா அவர்கள் தலைமை ஏற்று கொடி அசைத்து பேரணியை துவக்கி வைத்தார். வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஆறுமுகம் முன்னிலை வகித்தார்.மேலும் இந்நிகழ்ச்சியில் முதலாவது குற்றவியல் நீதிபதி ராஜ்குமார்,இரண்டாவது குற்றவியல் நீதித்துறை நடுவர் காயத்ரிலட்சுமி மற்றும் வழக்கறிஞர்கள் உள்பட ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பேரணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு தொடங்கி பிரதான மேட்டூர் சாலை வழியாக அந்தியூர் பிரிவு சாலைவரை விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்று மீண்டும் நீதிமன்றத்தை வந்தடைந்தது.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161